[2002 ஏப்ரல் 22

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல முறையற்ற நியமனங்கள் நடைபெறுகின்றன. அதோடு இதுமாதிரியான நியமனங்களிலே ஒரேமாதிரியான நடைமுறைகள் பின்பற்றப் படுவதில்லை. அதற்காகத்தான் 1983 ஆம் ஆண்டு நாம் இயற்றிய கூட்டுறவுச் சட்டத்திலே Common Cadre, Common Selection Board இருக்க வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட்டது. அதற்கான விதிகள் 1988 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டன. ஆனால் 17 ஆண்டுகள் ஆகியும் இதுவரை அது கடைப்பிடிக்கப்படவில்லை. இப்படிப்பட்ட முறையற்ற நியமனங்களுக்கு முறையான, அடிப்படையான தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிற Common Cadre, Common Selection Board கொண்டு வரத்தான் வேண்டும். அதைச் செய்ய இந்த அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுப் பணி நியமனங்களை ஒழுங்குபடுத்த, Common Cadre கொண்டுவர வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய முக்கிய நோக்கம். Common Cadre-ஐக் கொண்டு வருவதிலே மிகுந்த ஆர்வத்தோடு இந்த அரசு இருக்கிறது. இடையிலே உயர் நீதிமன்றத்திலே இந்தச் செயலாளர்கள் எல்லாம் சென்று தடையாணை பெற்றிருக்கிற காரணத்தினாலே, அந்தத் தடையாணையை நீக்குவதற்கு இந்த அரசு முனைப்போடு இருக்கிறது. இந்தத் தடையாணை நீக்கப்பட்ட உடனே இந்த Common Cadre உருவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 192, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

192—

பேருந்து நிறுத்தம்

***6642—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 22]

(அ) பாபநாசம்-திருநெல்வேலி எல்.எஸ்.எஸ். பேருந்து பத்தமடை, கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையம், வீரவநல்லூர் வரை வந்து செல்ல அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பாபநாசம்-திருநெல்வேலி வழித்தடத்தில் இயக்கப்படும் எல்.எஸ்.எஸ். பேருந்துகள் அனைத்தும் பத்தமடை, கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் வீரவநல்லூர் திரையரங்கு ஆகிய இடங்களில் நின்று பயணிகளை ஏற்றியும், இறக்கியும் செல்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாபநாசம், திருநெல்வேலி செல்லும் எல்.எஸ்.எஸ். பேருந்துகள் திருநெல்வேலியிலிருந்து பத்தமடை, வீரவநல்லூர் திரையரங்கம் மற்றும் கல்லிடைக்குறிச்சியிலுள்ள புதிய பேருந்து ஆகிய இடங்களுக்குச் செல்கின்றன என்றாலும் வீரவநல்லூர் நகரப் பஞ்சாயத்தைப் பொறுத்தவரை அங்கே பொதுமக்கள் பயன்பெற வேண்டுமென்றால் திரையரங்கிற்கு அடுத்தாற்போலுள்ள வீரவநல்லூர் பேருந்து நிலையத்தில் எல்.எஸ்.எஸ். பஸ் நிற்க வேண்டும். வீரவநல்லூர் அதிகமான ஜனத்தொகையைக் கொண்ட நகரப் பஞ்சாயத்து. ஆகவே வீரவநல்லூர் பேருந்து நிலையத்தில் மக்கள் நலன் கருதி எல்.எஸ்.எஸ். பஸ் வீரவநல்லூர் ஊருக்குள் இருக்கும் பேருந்து நிலையத்தில் நின்று செல்ல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கல்லிடைக்குறிச்சி புதிய பேருந்து நிலையத்திலும், பத்தமடை பேருந்து நிலையத்திலும் பேருந்துகள் நின்று செல்கின்றன. வேண்டுகோள், நிறுத்த இடங்களாக ஏற்கப்பட்டு, அவ்வாறு எல்லாப் பேருந்துகளும் அங்கு நின்று ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. அதேபோல் வீரவநல்லூர் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் சென்று வரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். வீரவநல்லூர் திரையரங்கிற்கு முன்பாக அந்தப் பேருந்துகள் நிறுத்தி பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்கின்றன. இதனை வீரவநல்லூர் பேருந்து நிலையத்திற்குச் சென்று

திரும்புகின்ற நிலையில் இயக்கினால் பாபநாசம், திருநெல்வேலி பிரதான தடத்தில் தற்போது இயக்கப்பட்டுவரும் சுற்றுகள் குறைவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. மேலும் வீரவநல்லூர் பேருந்து நிலையத்தின் வழியாக இயக்கப்படும் அனைத்துப் பேருந்துகள், மற்ற பேருந்துகள், விரைவுப் பேருந்துகள், சாதாரண புறநகர்ப் பேருந்துகள் எல்லாம், அந்தப் பேருந்து நிலையத்திற்குச் சென்று பயணிகளை ஏற்றி வருகின்றன. இந்த நிலையில் எல்.எஸ்.எஸ். பேருந்தை அங்கு சென்று வரப் பணித்தால் அதன்மூலமாக, இயக்கப்படுகின்ற சுற்றுகள் குறைந்து அதனால் வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அதனை தற்போது இயக்க முடியாத சூழ்நிலை, அந்தப் பேருந்திற்கு வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மக்கள் நலன் கருதி 2275 புதிய பேருந்துகளை இயக்க அனுமதி அளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசிற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியில் பல பேருந்துகள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் புதிய பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுப்பதுடன் தொகுதியைச் சுற்றுப்பயணம் செய்தபோது, சில வழித்தடங்களில் பேருந்துகள் இல்லாமல் இருப்பதால் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்யும் வழித்தடங்களில் இரண்டு அல்லது மூன்று வழித்தடங்கள் இயக்க புரட்சித் தலைவி அம்மா அரசு பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோன்ற நிலை முன்பு இருந்தது, சென்ற ஆட்சிக்காலத்திலே இருந்தது உண்மைதான். ஏற்கெனவே இருந்த அந்த நிலையையெல்லாம் மாற்றி பழுதடைந்த பேருந்துகளை புதிய பேருந்துகளாக மாற்றி வருகின்ற சூழ்நிலையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்பொழுது செய்திருக்கிறார்கள். அதனால் புதிய பேருந்துகள் இப்பொழுது படிப்படியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததற்கிணங்க வாங்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக அந்தப் பழைய பேருந்துகள் எல்லாம் மாற்றி புதிய பேருந்துகள் இன்று கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையையும் பரிசீலனை செய்து அந்தப் பகுதிக்குத் தேவையான புதிய பேருந்துகளை இயக்குவதற்கு அரசு முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்கின்ற வழித்தடங்களில் புதிய பேருந்துகள் இயக்குவதற்கு அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி, நிதி நிலைமையைக் கருத்தில்கொண்டு, சூழ்நிலைக்கு ஏற்ப நமது சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 193, திரு. த. ஆறுமுகம், மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

193—

ஒப்பந்தத் தொழிலாளர்கள்

***9075—திரு. த. ஆறுமுகம்:**

மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர், எண்ணூர் அனல் மின் நிலையத்தில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணி செய்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் சுமார் 1,200 பேர் மின் வாரியத்தில் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவார்களா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பணி நிறுத்தம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்களை மீண்டும் பணியமர்த்துவது தொடர்பாக தொழிற்சங்கங்கள் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளன. நிலுவையில் உள்ள மேற்படி மேல்முறையீடு வழக்கின் தீர்ப்பிற்கேற்ப இதுகுறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த